# PDM COURT (FAC), SANKARANKOVIL

**தேதி 20.06.2023**

**அசல் வழக்கு எண். 20/2016**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அசல் வழக்கு எண்.191/2014 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை நான் இந்த வழக்கில் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு பிரதிவாதியான நவநீதகிருஷ்ணன் மேற்சொன்ன அசல் வழக்கு எண்.191/2014 வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் கண்ட பிரதிவாதியான கணபதி என்பவரிடமிருந்து இந்த வழக்கு பிரதிவாதியான நவநீதகிருஷ்ணன் கிரையம் பெற்ற ஆவணத்தை மேற்சொன்ன வழக்கில் வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன அசல் வழக்கு எண்.191/2014 வழக்கு தாக்கல் செய்த காலத்திலேயே இந்த பிரதிவாதி மேற்சொன்ன கணபதியிடமிருந்து சொத்தை கிரையம் வாங்கிய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.191/2014 வழக்கில் நான்தான் வாதி என்றால் சரிதான். அந்த வழக்கில் கணபதி என்பவர் பிரதிவாதி என்றால் சரிதான். அந்த வழக்கில் வேறு யாரும் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.191/2014 வழக்கை நான் தாக்கல் செய்த காலத்திலேயே மேற்சொன்ன கணபதி சொத்தை இந்த பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.191/2014 தாக்கல் செய்த தேதியில் பிராது தபசில் சொத்தில் கணபதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.191/2014 வழக்கு என்னால் பிராது தபசில் சொத்தில் உரிமையில்லாத நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்தபோது நவநீதகிருஷ்ணன் என்னிடம் எந்த தகராறும் செய்யவில்லை. அந்த

வழக்கு தீர்ப்பான பிறகுதான் நவநீதகிருஷ்ணன் பிராது தபசில் சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என என்னிடம் தகராறு செய்தார். அசல் வழக்கு எண்.191/2014 வழக்கை நான் தாக்கல் செய்த காலத்தில் நான் பிராது தபசில் சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.191/2014 வழக்கில் கணபதியும், அவருடைய சகோதரர்களும் பாகம் பிரித்துக்கொண்டதாக நான் கட்சி செய்துள்ளேன் என்றாலும், அதனை அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அந்த வழக்கின் குறுக்குவிசாரணையின்போது கணபதியும், அவருடைய சகோதரர்களும் பாகம் பிரித்துக்கொண்டதாக நான் ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.191/2014 மற்றும் இந்த வழக்கை தவிர நான் வேறு எந்த வழக்குகளும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லும் கணேசனின் தகப்பனார் கசமுத்து என்றால் சரிதான். மேற்சொன்ன கசமுத்துவின் உடன்பிறந்த சகோதரர்தான் கணபதி என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த கணேசனுக்கு மேற்சொன்ன கணபதி சித்தப்பா என்றால் சரிதான். நான் கணேசனிடமிருந்து கிரையம் வாங்கிய விபரம் கணபதிக்கு தெரியும் என்று நான் பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு கிரையம் கொடுத்த கணேசன் சொத்தை கருப்பாய் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன கருப்பாய்க்கு பிராது தபசில் சொத்தில் உரிமை இல்லை என்றாலும், அதனை சரிசெய்துகொடுக்கும்படி நான் கணேசனிடம் கேட்டேன் என்று சொன்னாலும்,அவசியம் இல்லை என்பதால் நான் கேட்கவில்லை. கணேசனுக்கு கிரையம் கொடுத்தாக சொல்லும் கருப்பாய்க்கு பிராது தபசில் சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்பதால் கணேசனின்

தகப்பனாரான கசமுத்துவும் அவருடைய சகோதரரான கணபதியும் என்னோடு வஞ்சககூட்டு சேர்ந்து என்னை கணபதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும்படியும், அதனை கணபதி பெயரளவில் எதிர்வாதம் செய்து எனக்கு சாதகமாக தீர்ப்பாகும்படி வழக்காடுவதாக சொல்லியதால் நானும், மேற்படி கணபதியும் சேர்ந்து அசல் வழக்கு எண்.191/2014 வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.191/2014 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு பிராது தபசில் சொத்தின் உரிமை இல்லாத நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டு பெறப்பட்ட தீர்ப்பு என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமானதாக கூறும் சொத்தை பொறுத்து கணபதி என்பவர் என்னுடைய பத்திரத்திற்கு பிறகு கிரையம் கொடுத்ததாக நான் மேற்படி வழக்கு தாக்கல் செய்தபோதும், மேற்படி கணபதிக்கு எதிராக நாளதுவரை எவ்வித குற்றநடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்ததாக சொல்லும்புகாரின் பேரில் கணபதிக்கு எதிராக எவ்வித முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் வகையில் எவ்வித குற்ற வழக்கும் கணபதிக்கு எதிராக கொடுக்கப்படவில்லை என்றாலும் சரிதான். நானும், கணபதியும் வஞ்சககூட்டோடு இருந்து வருவதால்தான் நான் இன்றுவரை கணபதிக்கு எதிராக எவ்வித குற்ற நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

3. சர்வே எண்.220/4 ல் உள்ள கிணற்றை நான் கிரையம் வாங்கியதாக வழக்காடி வருகிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் சர்வே எண்.220/4 க்கான பட்டா என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பி.வா.சா.ஆ.3 பட்டாவின் உரிமையாளர்கள் என கண்டுள்ள நபர்கள் யாரையும் நான் இந்த வழக்கிலும், மேற்சொன்ன அசல் வழக்கு எண்.191/2014 வழக்கிலும்

கட்சி சேர்க்கவில்லை என்றால் அவர்களுக்கும், பிராது தபசில் சொத்திற்கும் எவ்வித உரிமையும் இல்லை என்பதால் அவர்களை நான் கட்சி சேர்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள்தான் சர்வே எண்.220/6 பி மற்றும் 220/6 ஏ- க்கான புல வரைபடங்கள் என்றால் சரிதான். அவைகள் **பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ-5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சர்வே எண்.220/6 ஏ மற்றும் சர்வே எண்.220/6 பி க்கும் வடக்கு பக்கம் சர்வே எண்.220/5 இடம் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.220/6 ஏ மற்றும் சர்வே எண்.220/6 பி க்கும் தென்புறம் சர்வே எண்.220/7 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.220/6 பிக்கு மேல்புறம் சர்வே எண்.220/6 ஏ உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.220/6 ஏக்கும் மேல்புறம் சர்வே எண்.220/4 உள்ளது என்றால் சரிதான்.

4. பி.வா.சா.ஆ.1ன் படி சர்வே எண்.220/5 க்கு ஆண்டி மகன் மாடன், மாடசாமி குமாரர்கள் மாரிமுத்து, பிரகாஷ், சுபேந்திரன் ஆகியோர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன மாடன் என்பவர் கசமுத்து மற்றும் கணபதி ஆகியோரின் சித்தப்பா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.220/7 - க்கான பட்டா ஆவுடையம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.220/6 பிக்கு என் பெயரில் பெறப்பட்டுள்ள பட்டா இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது பெறப்பட்டது என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் பிராது தபசில் சொத்தை பொறுத்து நான் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை கோரிதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை இந்த பிரதிவாதியை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.4 பட்டா 31.05.2019 அன்று பெறப்பட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். .வா.சா-4 ல் குறிப்பிட்டுள்ள தேதிக்கு முன்பு என் பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது- அந்த பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் பெயரில் பட்டா மாறுதல் செய்ததற்கான உத்தரவு நகல் உள்ளதா என்றால் உள்ளது. என் பெயரில் வழங்கப்பட்ட பட்டாமாறுதல் உத்தவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 தீர்வை ரசீது 01.06.2019 செலுத்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ரசீது வழக்கிடை காலத்தல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா-சா.ஆ- 6 கிரைய ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது என்றால் உள்ளது. அந்த அசல் ஆவணத்தை நான் நீதிமன்றததில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சார்பதிவாளர் நகலை மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். அசல் ஆவணத்தை தாக்கல் செய்ததற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் கணேசனிடமிருந்து கிரையம் வாங்கியதாக சொல்லும் ஆவணத்தின் சார்பதிவாளர் நகல்தான் வா.சா.ஆ.7 என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தின் அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்னுடைய கிரைய ஆவணம் மோசடியானது என்பதால்தான் நான் அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்களுக்கு எவ்வித சாட்சி அந்தஸ்தும் வழங்க முடியாது என்றாலும், அந்த ஆவணங்கள் ஏற்புடையதல்ல என்றாலும் சரியல்ல. என்னுடைய முன் பாத்தியஸ்தர்கள் என சொல்லப்படும் கணேசன் பெயரிலோ கருப்பாய் பெயரிலோ பிராது தபசில் சொத்திற்கு பட்டா ஏற்பட்டதில்லை என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து கணேசனோ, கருப்பாயியோ அனுபவித்து வந்ததை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் இல்லை என்றால்

சரிதான். பிராது தபசில் சொத்தில் கணேசனுக்கோ, கருப்பாயிக்கோ எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்து ஆதியில் மாடத்தி என்பவரால் 11.02.1936 ம் தேதியிட்ட பதிவு ஆவணம் மூலம் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். மாடத்தியின் கணவர் பெயர் ஆண்டிகுடும்பன் என்றால் சரிதான். மேற்சொன்ன மாடத்தி தபசில் சொத்தை 30.12.1941 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணம் மூலம் முத்துவிநாயகப்ப புலவர் குமாரர் சிவசங்கரபுலவர் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதேதேதியில் சிவசங்கரபுலவரிடமிருந்து ஆண்டிக்குடும்பன் மகன் பாலாறு என்பவர் இறங்கொத்தி ஆவணம் மூலம் பெற்று அனுபவித்து வந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அதன்பிறகு சிவசங்கரபுலவர் 30.08.1943 தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் தபசில் சொத்தை மாடத்தி என்பவருக்கு மறுகிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதேதேதியில் மாடத்தி தபசில் சொத்தை பொறுத்து புளியங்குடி கிராமத்தை சேர்ந்த மொட்டையன் மக்கள் பெரியகருப்பன், சின்ன கருப்பன் ஆகியோர் பெயரில் ஒத்திப்பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு மேற்சொன்ன பெரியகருப்பன் மற்றும் சின்ன கருப்பன் ஆகியோர் சிவனாண்டி முதலியார் குமாரர் தர்மலிங்க முதலியாருக்கு Madeover பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அதன்பிறகு மேற்சொன்ன தர்மலிங்க முதலியார் முத்தையாநாடார் என்பவருக்கு Madeover கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அதன்பின் 02.08.1961 ல் பெரும்பத்துாரை சேர்ந்த காக்கையன் மகன் லட்சுமணன் என்பவருக்கு முத்தையாநாடார் Madeover பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன லட்சுமணன் திருமணமாகாமல் முதல்நிலை வாரிசு இல்லாமல் இறந்துபோனார் என்றால் எனக்கு தெரியாது. லட்சுமணனுக்கு

அவருடைய உடன்பிறந்த சகோதரர் சின்னகருப்பன் என்பவரின் மகன் பால்ராஜ் மட்டுமே வாரிசாக இருந்ததால் அவரிடமிருந்து பாலாறு குமாரர் கணபதி என்பவர் 2010 ம் வருடத்தில் அடமான கடனை செல்லடித்து ரசீது பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்சொன்ன பாலாறு குமாரர் கணபதி என்பவர் மேலே சொன்ன மாடத்தியின் நேரடி வாரிசு என்றால் சரிதான். அவர் மாடத்திக்கு ஆண்வழி வாரிசு ஆவார். எனது கிரையதாரரின் முந்தைய பாத்தியஸ்தரான கருப்பாயி என்பவர் மாடத்தியின் பெண்வழி வாரிசு ஆவார். நான் சொல்லும் கருப்பாயி மாடத்தியின் வாரிசு இல்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற காலத்தில் கருப்பாயிக்கு என்ன வயது என்றால் எனக்கு சரியாக தெரியாது சுமார் 65 வயது இருக்கும். கருப்பாயிக்கு எப்போது திருமணம் நடந்தது, எப்போது இறந்தார், அவருடைய தாயார் பெயர் மற்றும் தாயார் இறந்த தேதி எனக்கு தெரியாது என்றால் சரிதான். கருப்பாயின் பாட்டி என சொல்லப்படும் மாடத்தி எப்போது இறந்தார் என எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்லும் மாடத்தியின் பெண் வாரிசுகள் எப்போது பிறந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்கள் எந்த ஊரில் திருமணம் செய்துகொடுக்கப்பட்டார்கள் என்றும், எங்கு வாழ்ந்து வருகிறார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மாடன், கணபதி ஆகியோர் எப்போது பாகம் பிரித்துக்கொண்டு அனுபவித்து வந்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நிலவருவாய் மேம்பாட்டு திட்டத்தின்போது தபசில் சொத்திற்கு மாடன் மற்றும் கணபதி பெயரில் பட்டா எண்.720 கீழ் பட்டா ஏற்பட்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் பட்டா மட்டுமே அவர்கள் பெயர் ஏற்பட்டது சொத்தை அவர்கள் அனுபவிக்கவில்லை. அதேபோல் சர்வே எண்.220/6 க்கு பாலாறு குமாரர்கள் கசமுத்து மற்றும் கணபதி ஆகியோர் பெயரில் பட்டா எண்.2700 கீழ் பட்டா ஏற்பட்டு அனுபவித்து

வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பாலாறு என்பவருக்கு உடன் பிறந்த நபர் பெயர் மாடன் என்றால் எனக்கு தெரியாது. மாடன் என்பவர் தனக்கு பாகமாக கிடைத்த சர்வே எண்.220/2, 220/5 க்கு பட்டா எண்.945 கீழ் பட்டா பெற்று அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. சர்வே எண்.220/1 க்கு அடைக்கலம் என்பவர் பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவித்து வந்தார் என்றால் பட்டா மட்டும் அவர் பெயரில் உள்ளது சொத்தை அவர் அனுபவிக்கவில்லை. மேற்சொன்ன மாடத்தியின் வாரிசுகளான பாலாறு, மாடன் மற்றும் அடைக்கலம் ஆகியோர் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டாக்களை ரத்து செய்யக்கோரி மாடத்தியின் பெண் வாரிசுகள் நாளது தேதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. மாடத்திக்கு எந்த பெண் வாரிசுகளும் இல்லை என்றாலும், அதனால்தான் தபசில் சொத்திற்கான பட்டாவில் எந்த பெண்களின் பெயர்களும் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. மாடத்திக்கு பெண் வாரிசுகள் இல்லை என்பதால்தான் அவருடைய ஆண்வாரிசுகள் மூலம் வந்த கணபதி என்பவர் அவர் பாகத்திற்கு வந்த சொத்தை உரிய முன் உரிமை மூல ஆவணங்களின் தொகுப்புகளை கொடுத்து 12.11.2013 ல் பிரதிவாதிக்கு தபசில் சொத்தை சரியான பிரதி பிரயோஜனத்திற்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் அசல் வழக்கு எண்.191/2014 வழக்கில் தீர்ப்பு பெற்றபிறகு தான் பிரதிவாதி மீது கரிவலம்வந்தநல்லூர் கிராமத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காவல்நிலைய விசாரணைக்கு பிறகு நான் கணபதிக்கு எதிராக மட்டுமே தீர்ப்பு பெற்றுள்ளதாகவும், இந்த பிரதிவாதிக்கு எதிராக தீர்ப்பு பெறவில்லை என்பதாலும், என்னை நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். காவல்நிலைய விசாரணையில் பிரதிவாதி தபசில் சொத்தை தான் கிரையம் பெற்றுவிட்டதாகவும், தபசில் சொத்தை தான் அனுபவித்து

வருவதாகவும் எனக்கு சொத்தை கொடுக்கமுடியாது என்று தெரிவித்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி பெற்றுள்ள கிரையம் உண்மையான கிரையம் என்றாலும், அது செல்லத்தக்க கிரையம் என்றாலும் சரியல்ல. நான் தாவா சொத்தின் அனுபவத்தில் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றால சரியல்ல. என் பெயரில் பிறப்பிக்கப்பட்ட ஆவண எண்.2442/2009 மற்றும் கிரைய ஆவண எண்.1574/2013 ஆவணங்களின் அடிப்படையில் நான் தபசில் சொத்தை பொறுத்து வேறு நபரின் பெயருக்கு போலியான ஆவணத்தை தயாரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள மேற்சொன்ன ஆவணங்களை செல்லாது என விளம்புகை கோரியுள்ள பிரதிவாதியின் எதிர்கோரிக்கை ஏற்புடையது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் மூல ஆவணங்கள் இல்லாமலும் நான் பெற்ற அசல் வழக்கு எண்.191/2014 வழக்கில் தீர்ப்பும் என்னால் மேற்சொன்ன கணபதியுடன் வஞ்சககூட்டு சேர்ந்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றால்சரியல்ல. என்னுடைய ஆவணங்களின் அடிப்படையில் நான் தபசில் சொத்தின் அனுபவத்தில் இலலை என்றால சரியல்ல. என்னுடைய கிரைய ஆவணங்களிலும், பிராதிலும் சொல்லியுள்ள சொத்துக்களின் நான்குபுற மால்கள் தவறானது என்றால் சரியல்ல. என்னுடைய கிரைய ஆவணத்திலும், பிராதிலும் மால்களாக காட்டப்பட்டுள்ள நபர்கள் அந்த சொத்தின் ஸ்தல அனுபவத்திலும் மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களிலும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிராதிலும், ஆவணத்திலும் சொல்லப்பட்டுள்ள நான்குபுற மால்களில் கண்டுள்ள நபர்கள் கற்பனையானவர்கள் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் பெறுவதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால சரியல்ல. நான்

தாக்கல் செய்துள்ள வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கை அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**.